## புதுவை அரசு

# மின்துறை

**எண்.137, நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, புதுச்சேரி**

# பொது அறிவிப்பு

கோவா மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம், புதுவை அரசு, மின்துறை கண்காணிப்பு பொறியாளர்-I 2013-14 நிதி ஆண்டுக்கான நிகர வருவாய் தேவை மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றுக்காக தாக்கல் செய்துள்ள விண்ணப்பம் தொடர்பான அறிவிப்பு.

மின்சார பங்கீட்டை முறைப்படுத்தி வழங்குவதற்கும், உரிய விலையில் விற்பனை செய்வதற்கும் புதுவை மின்துறையானது, உரிமம் பெற்றுள்ள வகையில், மின்சார சட்டம் 2003, பிரிவு 62-ன் கீழ் கோவா மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகளின்படி, ஒழுங்குமுறை ஆணையத்திடம், 2013-14 நிதி ஆண்டுக்கான நிகர வருவாய் தேவை மற்றும் மின்கட்டண விண்ணப்பத்தை, 2013-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் தேதி தாக்கல் செய்துள்ளது. அவை மேன்மைகுரிய ஆணையின் கோப்பு எண். 96/2013 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய விண்ணப்பத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள “மொத்த நிகர வருவாய் தேவை” விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | விபரங்கள் | தொகை (ரூபாய் கோடியில்) **2013-14** |
|---|---|---|
| 1. | கொள்முதல் செய்யப்படும் மின்சாரத்தின் மொத்த விலை | 1049.6 |
| 2. | **இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள் (O&M)** | |
| | (அ) ஊழியர்களுக்கான செலவு தொகை | 67.6 |
| | (ஆ) நிர்வாகம் மற்றும் பொதுவான செலவுகள் | 5.3 |
| | (இ) சீர் செய்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் | 17.6 |
| | **மொத்த இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள்** | **90.5** |
| 3. | தேய்மானம் | 25.0 |
| 4. | வட்டி மற்றும் நிதி நிர்வாக செலவுகள் | 2.1 |
| 5. | செயலாக்க மூலதனத்தின் மீதான வட்டி | 13.8 |
| 6. | நியாயமான / பங்கினால் வரவு | 11.0 |
| 7. | முந்தய ஆண்டுகளின் இடைவெளி நிதியிலிருந்து சேர்ப்பு | 92.6 |
| 8. | மொத்த நிகர வருவாய் தேவை (1 முதல் 7 வரை கூட்டுத் தொகை) | 1284.6 |
| 9. | கழிவு: கட்டணம் அல்லாதவற்றின் வருவாய் | 144.3 |
| 10. | நிகர வருவாய் தேவை (8-9) | 1140.3 |
| 11. | கழிவு : நடைமுறையில் உள்ள கட்டணங்கள் மூலம் வருவாய் | 833.8 |
| 12. | கழிவு : எரிபொருள் கூடுதல் வரிவிதிப்பின் வருவாய் (FCA) | - |
| 13. | வருவாய் இடைவெளி(10-(11+12)) | 306.6 |
| 14. | விற்பனை(கோடி யூனிட்டுகளில்) | 2470.3 |
| 15. | சராசரி விலை (ரூபாய்/யூனிட்) | 4.62 |
| 16. | சராசரி வருவாய் (ரூபாய்/யூனிட்) | 3.38 |

1. **நிகர தொழில் நுட்ப மற்றும் வர்த்தக இழப்புகள் (AT&C Losses)**

   உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார ஊடிணைப்பு மற்றும் பகிர்மானத்தின் இழப்புகள் மற்றும் நிகர தொழில் நுட்பம் மற்றும் வர்த்தக இழப்புகளின் விபரங்கள் பின்வருமாறு.

| விளக்கம் | 2013-14 |
|---|---|
| ஊடிணைப்பு மற்றும் பகிர்மான இழப்புகள் (T&D Losses) | 13.00% |
| தொழில் நுட்பம் மற்றும் வர்த்தக இழப்புகள் (AT&C Losses) | 15.04% |

2. வருவாய் இழப்பீட்டை ஈடு செய்து கூடுதல் வருவாய் ஈட்டுவதற்காக புதுவை மின்துறை மின்சார கட்டணத்தில் மாற்றம் செய்ய உத்தேசித்துள்ளது.
3. முதல் பத்தியில் கண்டுள்ளபடி தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள், எண்.137, நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் உள்ள மின்துறை கண்காணிப்பு பொறியாளர்-I அலுவலகம் மற்றும் காரைக்கால், மாஹி, ஏனாம் மின்துறை அலுவலகங்களில் கிடைக்கும்.
4. ஆர்வமுள்ளவர்கள், மொத்த நிகர வருவாய் தேவை மற்றும் மின்சார கட்டண ஆவணங்களை அலுவலக நேரங்களில் ஆய்வு செய்து குறிப்பெடுத்துக் கொள்ளலாம்.
5. மேற்குறிப்பிட்டுள்ள அலுவலங்களில், ஆவணங்களின் நகல்களை (இணைப்புகள் இல்லாமல்) ஒரு பிரதியை ரூ.100/- வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் மேற்கண்ட ஆவணங்கள் மின்துறை இணையதளம் **http://electricity.puducherry.gov.in** இல் பார்வையிடலாம்.
6. மின்துறை மின்நுகர்வோர்களுக்கு வழங்கும் மின்சாரத்தின் 2013-14-ம் ஆண்டிற்கான உத்தேச மின்கட்டணத்தின் பல்வகைப்பட்ட விபரங்கள் கீழ்கண்ட இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.
7. மின்துறை சமர்ப்பித்துள்ள மொத்த நிகர வருவாய் தேவை மற்றும் மின்சார கட்டணங்கள் ஆவணத்தின் மீதான மறுப்புகள் மற்றும் ஆலோசனைகள் கூற விரும்வோர், தத்தம் கருத்துக்களை தக்க ஆதாரங்களுடன் ஐந்து நகல்களாக, அரியானா மாநிலம், குர்கான்-122016 உள்ள உத்யோக் விஹார்: பகுதி-V, வனிஜிய நிகுஞ்ச், HSIIDC அலுவலக வளாகம், இரண்டாம் மாடியில் உள்ள கோவா மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான இணை மின்சார ஒழுங்குமுறை ஆணைய செயலரிடம், (The Secretary, Joint Electricity Regulatory Commission for Goa & UTs Second floor, HSIIDC Office Complex, Vanijya Nikunj Complex, Udogvihar, Phase-V, Gurgaon-122016, Haryana) பதிவு செய்யப்பட்ட தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ 21/02/2013 தேதிக்குள் சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
8. மேல் கூறியுள்ளபடி மறுப்பு மற்றும் ஆலோசனைகளை ஐந்து நகல்களாக தமது பெயர் மற்றும் முழு முகவரியுடன், உறுதிமொழி (Affidavit) பத்திரத்தோடு அளித்தல் வேண்டும். மேலும் மறுப்பு தெரிவிப்போர் எந்த நிறுவனத்தின் சார்பாக அளிக்க விரும்புகிறாரோ அல்லது எவ்வகை நுகர்வோர்களின் சார்பாக அளிக்க விரும்புகிறாரோ, அதைப்பற்றி தெளிவாக குறிப்பிட வேண்டும். மேலும் மறுப்பு மற்றும் கருத்துகள் கூறவிரும்புவோர் வேண்டும்போது நேரில் ஆஜராக தயாராக இருப்பின், அதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.
9. இவ்வறிவிப்பின் கீழ் பெறப்படும் எழுத்துப்பூர்வமான மறுப்புகளை மற்றும் ஆலோசனைகளை இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பரிசீலித்து தகுதியான மறுப்புகள் அளிப்போரை நேரில் அழைத்து ஆய்வு செய்யும். அதற்கான குறிப்பிட்ட தேதிகளை ஆணையம் விரைவில் வெளியிடும்.

# மின்கட்டண அட்டவணை

## தற்போதைய / மற்றும் 2012-13 ,2013-14 ஆம் வருடங்களுக்கான புதிய உத்தேச மின்கட்டண விபரம்

| நுகர்வோர் பிரிவு | தற்போதைய கட்டணம் | | உத்தேச கட்டணம் | | வித்தியாசம் | |
|---|---|---|---|---|---|---|
| | மாத நிலைக்கட்டணம் (Rs. per month /per connection) | மின்கட்டணம் (Rs. per unit) | மாத நிலைக்கட்டணம் (Rs. per month /per connection) | மின்கட்டணம் (Rs. per unit) | மாத நிலைக்கட்டணம் (Rs. per month /per connection) | மின்கட்டணம் (Rs. per unit) |
| **வீட்டு உபபோயகம்** | | | | | | |
| 0-100 | 10.00 | 0.60 | 20.00 | 1.50 | 10.00 | 0.90 |
| 101-200 | 10.00 | 0.95 | 50.00 | 2.50 | 40.00 | 1.55 |
| 201-300 | 15.00 | 1.80 | 75.00 | 3.50 | 60.00 | 1.70 |
| >300 | 15.00 | 2.35 | 100.00 | 4.50 | 85.00 | 2.15 |
| **குடிசைக்கான மின் இணைப்பு** | 20.00 | - | 50.00 | - | 30.00 | - |
| **வர்த்தகம்** | | | | | | |
| 0 - 100 | 30.00 | 2.50 | 50.00 | 4.50 | 20.00 | 2.00 |
| 101 - 250 | 30.00 | 3.70 | 100.00 | 5.25 | 70.00 | 1.55 |
| >250 | 30.00 | 4.30 | 200.00 | 5.50 | 170.00 | 1.20 |
| **வேளாண்மை** | | | | | | |
| **சிறு விவசாயிகள்** | 50.00 | - | 100.00 | - | 50.00 | - |
| **மற்ற விவசாயிகள்** | 200.00 | - | 300.00 | - | 100.00 | - |
| **தெரு விளக்கு** | - | 3.50 | - | 4.75 | - | 1.25 |
| **குறைந்த அழுத்த தொழிலகம்** | | | | | | |
| 0 - 1000 | 30.00 | 3.40 | 200.00 | 4.25 | 170.00 | 0.85 |
| >1000 | 30.00 | 3.65 | 200.00 | 4.50 | 170.00 | 0.85 |
| **நீர் தேக்கத் தொட்டி** | 30.00 | 3.80 | 200.00 | 4.60 | 170.00 | 0.80 |
| **தற்காலிக மின் இணைப்பு (LT)** | - | 6.00 | - | 10.00 | - | 4.00 |
| **உயர் அழுத்த தொழிலகம் (I)** | | | | | | |
| **(A) - Contracted demand < 2000 KVA** | | | | | | |
| 0-100000 | 180.00 | 3.50 | 200.00 | 4.50 | 20.00 | 1.00 |
| >100000 | 180.00 | 3.65 | 200.00 | 4.60 | 20.00 | 0.95 |
| **(B) 2000 KVA< Contracted. Demand < 5000 KVA** | | | | | | |
| அனைத்து யூனிட்டுகளுக்கு | 190.00 | 3.80 | 220.00 | 4.70 | 30.00 | 0.90 |
| **c) வர்த்தகம்** | | | | | | |
| அனைத்து யூனிட்டுகளுக்கு | 190.00 | 4.00 | 220.00 | 4.70 | 30.00 | 0.70 |
| **அரசு மற்றும் தண்ணீர் தொட்டி உயர் அழுத்தம் (II)** | | | | | | |
| அனைத்து யூனிட்டுகளுக்கு | 220.00 | 3.40 | 220.00 | 4.60 | - | 1.20 |
| **உயர் அழுத்தம் (110KV) மிக உயர் அழுத்தம்-III** | | | | | | |
| அனைத்து யூனிட்டுகளுக்கு | 180.00 | 3.65 | 220.00 | 4.50 | 40.00 | 0.85 |

குறிப்பு : உத்தேசிக்கப்பட்டுள்ள நுகர்வோர் வாரியான மின்சார கட்டணத்தின் முழு விபரங்கள், அதற்கான வரையீடுகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை 2013-14-க்கான மொத்த நிகர வருவாய் தேவை மற்றும் மின்கட்டண விண்ணப்பத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**கண்காணிப்பு பொறியாளர்-I**
**மின்துறை, புதுச்சேரி**